28.01.2026

அ.வ.எண். 139/2022

வா.சா.1 – திருமதி.ராஜலட்சுமி, க/பெ.தேவராஜன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 28.01.2026 is accordance with the provision of Act X of 3331

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். வழக்குசொத்து என்னுடையது என்பதை உறுதிபடுத்தி கொடுப்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தை முத்தன் நாவீதன், கந்தன் நாவீதன் ஆகியோர்களின் வாரிசுகளிடம் இருந்து வாங்கினேன். 1991 – 1993 காலகட்டத்தில் வாங்கினேன். வழக்கு சொத்தை விசாரித்து வாங்கினேனா என்றால் ஆமாம், வழக்கு சொத்து பொது பயன்பாட்டிற்குரிய இடம் என்றால் சரியல்ல. நான் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊரக வளர்ச்சி அலுவலரிடம் விசாரணைக்கு சென்றேனா என்றால் இல்லை. நான் அவர்களிடம் விசாரணைக்கு சென்றேன் என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. நானும், எனது கணவரும் சின்னியம்பாளையம் பஞ்சாயத்து தலைவராக இருந்தோமா என்றால் ஆமாம். 2021 – 2024 ஆண்டு காலகட்டத்தில் நான் பஞ்சாயத்து தலைவராக இருந்தேன். அதற்கு முன்பாக சொத்து சம்பந்தமாக எந்த பிரச்சனையும் இல்லை. நான் தலைவரான பின்னிட்டு அரசியல் எதிரிகளால் பிரச்சனை ஏற்பட்டது. எனக்கு முன்பாக என் கணவர் பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றும், அதை பயன்படுத்தி நான் இந்த சொத்தை மோசடியாக கிரயம் பெற்றேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பொதுப்பயன்பாட்டிற்காக விடப்பட்ட சொத்து என்பதால் அதை நான் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. எனது வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும், பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur